# <u>கைரிக்ஷாக்காரர்களின் கண்ணியம் காப்பாற்றப்படுமா?</u>

## <u>ஓ கொல்கத்தா!</u>

குதூகலமான நகரம் – City of Joy என்று பிரபல எழுத்தாளர் ‘டோமினிக் லாபெயரால்’ புகழப்பட்ட நகரம் கொல்கத்தா. காளி அம்மன் வீற்றிருக்கும் நகரம் அதனால் காளி கட்டா என்ற காரணப் பெயர். இந்த நகரம் கல்கத்தா என்று பெயர் வந்ததற்கு வேடிக்கையான காரணமும் உண்டு. ஆங்கிலேயர்கள் முதலில் இங்கு வியாபாரம் தொடங்கிய போது பொது இடங்களில் வளர்ந்த கோரைப்புல் வெட்டும் பணியை உள்ளூர்வாசிகள் ‘கல்’ (நாளை) ‘காட்டா’ (வெட்டுவேன்) என்று தட்டிக் கழிப்பார்களாம். அதுவே மருவி ‘கல்கட்டா’ ஆனது என்பது வேடிக்கையான காரணம்.

முன்னாள் பாரத பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு கல்கத்தாவை ஊர்வல நகரம் ‘City of Processions’ என்று குறிப்பிட்டுள்ளார்கள். அந்த அளவுக்கு எப்போதும் ஊர்வலங்கள் வெவ்வேறு பிரிவினர்களால் எடுக்கப்படுகிறது. ஏற்கனவே வாகன நெரிசலில் தத்தளிக்கும் நகரம் மேலும் அடைப்புக்கு உள்ளாகிறது. சுமார் 15 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் கல்கத்தாவைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. நகருக்குள் வரும்போதே விஷ்வசர்மா சாமி ஊர்வலத்தால் ஒரு மணி நேரம் ஒரே இடத்தில் காக்க வேண்டியிருந்தது.

புதிய மேம்பாலங்கள் பல இடங்களில் கட்டப்பட்டுள்ளன. நவீன தொங்கும் பாலம் ஹூக்ளி நதி மேல் மிக நேர்த்தியாகவும் பிரம்மாண்டமானதாகவும் காட்சி அளிக்கிறது. சாலைகள் விரிவடைந்தாலும் வாகன எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துவிட்டது. நம் ஊரில் இரு சக்கர வாகனங்களும், ஆட்டோக்களும் தான் தாறுமாறாக ஓட்டுகிறார்கள் என்றால், இங்கு மினி வேன்கள், டாக்ஸிக்கள், கார்கள் வேகக் கட்டுப்பாடின்றி சாலையை அலசுவதும், ஓயாது ஒலி எழுப்புவதும் தலை சுற்ற வைக்கிறது. போக்குவரத்துப் போலீஸார் இருந்தும் ஒன்றும் செய்ய முடியாத நிலை பல இடங்களில்.

எழுத்தர் மாளிகை ( Writers building) தான் அரசு தலைமைச் செயலகம் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டது ஒய்யாரமாக தோற்றமளிக்கிறது. இந்த சாலையில் லாரிகள், ஆட்டோக்கள் செல்ல அனுமதியில்லை. பாதுகாப்பு போலீஸார் உஷாராக பணி செய்கின்றனர். எஸ்பளனேட் பகுதி தான் வியாபார மையம். எல்லா முக்கிய நிறுவனங்களின் தலைமையிடம். இந்தப் பகுதியில் உள்ள அகலமான சாலைகள் இன்றும் அழகாகவே பராமரிக்கப்படுகின்றன. இதே மாதிரி நிர்மாணிக்கப்பட்ட சென்னை எஸ்பளனேடு என்.எஸ்.சி போஸ் ரோடும், வடக்கு கடற்கரைச் சாலைகளும் எவ்வளவு குறுகி விட்டன! ட்ராம் இன்றும் எஸ்பளனேட் பகுதியில் இயக்கப்படுகிறது. குதிரைப் பந்தய மைதானத்திற்கு அருகில் பரந்த வெளியில் பல குதிரைகள் புல் மேய்ந்து கொண்டிருப்பது அழகான காட்சி. நகரின் மையப் பகுதியில் இவ்வளவு பசுமையா என்று வியக்க வைக்கிறது.

ஹூக்ளி நதிதான் நகரின் ஜீவ நதி. நகரத்தின் வளர்ச்சிக்கும், செழிப்பிற்கும் முக்கிய காரணம். விடிகாலையில் மக்கள் நதிக்கரையில் குவிந்து விடுகின்றனர். குளிப்பதும், துணி துவைப்பதும், மலம் கழிப்பதும் அடுக்கடுக்காக நடந்தேறுகிறது. மறைவில் ஒதுங்குவது முடியாது அவ்வளவு நெரிசல்.

பணம் கொழிக்கும் நகரம் என்பதற்கு வானளாவிய கட்டிடங்கள், வணிக வளாகங்கள், விதவிதமான உணவு விடுதிகள், கொட்டிக் கிடக்கும் பண்டகப் பொருட்கள். கல்கத்தா ரஸ குல்லா ஆதாரத்துடன் வாங்க வேண்டுமென்றால் கே.ஸி.தாஸ் என்ற பழம் பெரும் கடையில்தான். இவ்வளவு செழிப்பிற்கு இடையில் வறுமை கண்களை உருத்துகிறது. பிச்சை எடுக்கும் பெண்கள், உடல் நலம் குன்றிய குழந்தைகள் நிலை மனதை நெருடுகின்றது.

இன்றும் கை ரிக்ஷா உள்ள ஒரே நகரம் கல்கத்தா. கை ரிக்ஷாக்காரர்களின் நிலைமை மிகவும் கொடுமை. வண்டி இழுப்பதற்கு இடைஞ்சல் என்பதால் அவர்கள் செருப்பு அணிவதில்லை. வெயிலிலும், மழையிலும், மோசமான வீதிகளில் இவர்கள் கைரிக்ஷா இழுப்பது வேதனையாக இருக்கிறது. புதுமையான சவாரி என்று சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டவர் இதில் பவனி வருகின்றனர். அன்றாடம் இதில் செல்பவர்களும் உண்டு. மனிதன் மனிதனை சுமந்து செல்வது அடிமைநிலையின் அடையாளம் என்பது ஏன் பலருக்குத் தெரிவதில்லை? கைவண்டி ரிக்ஷாக்காரர்களின் கஷ்ட ஜீவனத்திற்கு நிவாரணம் கிடையாதா?

செப்டம்பர் 16 செவ்வாய்கிழமை ஹுக்ளி நதியின் 'பந்தாகாட்' கரையில் ஒரு கோர முடிவு. பீஹாரைச் சேர்ந்த சுதா சௌத்ரி தனது மூன்று குழந்தைகளுடன் சில வருடங்களாக ஊருக்குத் திரும்பாத கைரிக்ஷா இழுக்கும் தனது கணவன் சுகி சௌத்ரியைத் தேடி கல்கத்தா வருகிறாள். கைரிக்ஷா ஓட்டுபவர்களுக்கு ஏது நிரந்தர வீடு? தெரிந்த பகுதிகளில் தேடி அலைந்தததுதான் மிச்சம். மனம் உடைந்த சுதா தனது மூன்று குழந்தைகளையும் இறுக்கப் பிடித்துக் கொண்டு ஹுக்ளி நதியில் குதித்து விடுகிறாள். தெய்வாதீனமாக கரையில் இதனை கவனித்த பாபு ஜஸ்வால் என்பவர் அவர்களை காப்பாற்ற தண்ணீரில் குதித்து இரண்டு குழந்தைகளை காப்பாற்றுகிறார். ஆனால் சுதாவும் ஒரு வயது கைக்குழந்தையும் சுழியில் சிக்கி இறந்து விடுகின்றனர். போலீஸார் சுகியைத் தேடிக் கண்டுபிடிக்கின்றனர். வாழ்க்கையின் அன்றாட போராட்டத்தில் உழலும் சுகிக்கு மனைவி மற்றும் குழந்தையின் மரணம் பேரிடியாக விழுகிறது. எதற்காக இப்பெரிய நகரத்திற்கு திடீரென்று வந்தாள், ஏன் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்தாள் என்ற தாக்கம் ஒருபுறம் இருக்க எவ்வாறு மனைவியின் துணையின்றி இரு குழந்தைகளைக் காப்பாற்றப் போகிறோம் என்ற அவரது புலம்பலுக்கு விடை கிடையாது.

ஒரு கணக்குப் படி கல்கத்தா நகரில் சுமார் 1500 கைரிக்ஷாக்காரர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஏன்ஒட்டுமொத்தமாகவோ, படிப்படியாகவோ சைக்கிள் ரிக்ஷா கொடுக்க அரசோ, தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களோ முன்வரக் கூடாது! சென்னை நகரில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் இம்மாதிரி கைரிக்ஷாக்கள் இருந்த நிலை மாறி அவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா அளிக்கப்பட்டது நினைவுக்கு வந்தது.

கை ரிக்ஷாக்களைத் தடை செய்தால் அவர்களது ஜீவனம் என்ன ஆவது என்று வக்காலத்து வாங்கும் பொது நலம் விரும்பிகள் அவர்களுக்கு மாற்று வழி அமைக்க முயற்சிகள் எடுக்காதது விசித்திரமாக இருக்கிறது. தமிழகத்தில் இம்மாதிரி பிரச்சனை இருந்தால் சமுதாய அமைப்புகள் போட்டி போட்டுக் கொண்டு நிவர்த்தி செய்ய அறைகூவல் விடுவதோடு மட்டுமின்றி நிவாரணம் அளிப்பார்கள் என்பது பெருமைக்குரிய விஷயம்.

கல்கத்தா கைரிக்ஷா ஓட்டிகள் எல்லோரும் பீஹாரிலிருந்து ‘பஞ்சம் பிழைக்க’ கல்கத்தா நகருக்கு வந்தவர்கள். உள்ளூர்வாசிகள் அல்ல என்பதாலோ என்னவோ அவர்கள் பிரச்சனை தீர்க்கப்படாது இருக்கிறது என்ற சந்தேகம் எழுகிறது. முற்போக்கு சிந்தனையாளர்கள் நிறைந்த மேற்கு வங்கத்தில் இந்நிலை என்றால் பின்தங்கிய மாநிலங்களில் எவ்வளவு பிரச்சனைகள் பிரச்சனையாகவே நீடித்துக் கொண்டிருக்கும்! நீதி, கண்ணியம் எல்லோருக்கும் உரித்தாக்க வேண்டும் என்பதுதான் சர்வதேச மனித உரிமைகள் ஆணையத்தின் 2007–2008 ஆண்டுக்கான அறைகூவல். கொல்கத்தா கைரிக்ஷாக்காரர்களின் கண்ணியம் காப்பாற்றப்படுமா?

(ஆர்.நடராஜ்)
சிறைத்துறை தலைமை இயக்குநர்
சென்னை–8.
(Email – natarajips@hotmail.com)

00000